www.Padasalai.Net www.CBSEtips.in

Tsi8T

தென்காசி மாவட்டப் பொதுத் தேர்வுகள்

இரண்டாம் இடைப் பருவ பொதுத் தேர்வுகள் - நவம்பர் 2022

வகுப்பு 8

நேரம் : 1.30 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 50

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 5 X 1 = 5

1. நம்மை ................ ப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.
   அ) இகழ்வாரை ஆ) அகழ்வாரை
   இ) புகழ்வாரை ஈ) மகிழ்வாரை
2. பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தவை ................
   அ) கல்வெட்டுகள் ஆ) செப்பேடுகள்
   இ) பனையோலைகள் ஈ) மண்பாண்டங்கள்
3. அரசரை அவரது ................ காப்பாற்றும்.
   அ) செங்கோல் ஆ) வெண் கொற்றக்குடை
   இ) குற்றமற்ற ஆட்சி ஈ) படை வலிமை
4. சேரர்களின் தலைநகரம் ................
   அ) காஞ்சி ஆ) வஞ்சி
   இ) தொண்டி ஈ) முசிறி
5. தோட்டத்தில் தம்பி ஊன்றிய ................ எல்லாம் முளைத்தன.
   அ) சத்துகள் ஆ) பித்துகள்
   இ) முத்துகள் ஈ) வித்துகள்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** 5 X 1 = 5

1. சொல்களுக்கு இடையே வேற்றுமை உருபு மறைந்து வருவது ................
2. கதிர் + என என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ................
3. கனத்த மழை என்னும் சொல்லின் பொருள் ................
4. பாலாடை – இச்சொல்லுக்குரிய புணர்ச்சி ................
5. காட்டிலிருந்த வந்த ................ கரும்பைத் தின்றன.

**III. பொருத்தமான சொல்லுருபுகளை இட்டு நிரப்புக.** 2 X 1 = 2
(உடன், உடைய)

1. யாழ் தமிழர் ................ இசைக்கருவிகளுள் ஒன்று.
2. இடி ................ மழை வந்தது.

**IV. மரபுத் தொடர்களைத் தொடரில் அமைத்து எழுதுக.** 2 X 1 = 2

1. வாழையடி வாழையாக ................
2. முதலைக் கண்ணீர் ................

**V. பின்வரும் இசைக்கருவிகளின் பெயர்களை அகர வரிசைப்படுத்துக.** 1 X 2 = 2

படகம், தவில், கணப்பறை, பேரியாழ், உறுமி, உடுக்கை, தவண்டை, பிடில், நாதசுரம், மகுடி

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



**VI. கீழ்காணும் ஏதேனும் நான்கு வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடையளிக்கவும்.** **4 X 2 = 8**

1. பண்பு, அன்பு ஆகியவை பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை?
2. மண்பாண்டம் – சுடுமண் சிற்பம் ஒப்பிடுக.
3. உழவர்கள் எப்போது ஆரவார ஒலி எழுப்புவர்?
4. கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை?

**VII. கீழ்க்கண்ட ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **2 X 4 = 8**

1. திருக்கேதாரத்தைச் சுந்தரர் எவ்வாறு வருணனை செய்கிறார்?
2. மழையின்மையால் செடிகள் வாடிய நிலையை விளக்குக.
3. மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் குறித்து எழுதுக.
4. கொங்கு மண்டலச் சதகம் கூறும் கொங்கு மண்டலத்தின் எல்லைகள் யாவை?

**VIII. கீழ்கண்ட வினாக்களில் ஏதேனும் இரண்டிற்கு விடையளிக்கவும்.** **2 X 2 = 4**

1. இயல்பு புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
2. அன்மொழித் தொகையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
3. தொகை நிலைத்தொடர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?.

**IX. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்.** **1 X 5 = 5**

1. தமிழகக் கைவினைக் கலைகளைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

கொங்கு நாட்டின் உள் நாட்டு, வெளி நாட்டு வணிகம் குறித்து எழுதுக.

**X. கீழ்க்கண்ட பாடலை அடிபிறழாமல் எழுதுக.** **2 X 2 = 4**

1. "ஆற்றுதல்" எனத் தொடங்கி "செறா அமை" என்று முடியும் வரை – பாடறிந்து ஒழுகுதல் பாடலை எழுதுக.
2. "சொல்லுக" எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**XI. கீழ்க்கண்ட தலைப்புகளில் ஒரு கட்டுரை எழுதுக.** **1 X 5 = 5**

1. கைத்தொழில் ஒன்றை கற்றுக் கொள்.
2. இருப்பிடச்சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

தொகுப்பு: மு. ஸ்ரீராம்-மெட்ரிக் மே.நி.ப.
வல்லம்-627809, தென்காசி.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593